# MIGRATION OF THE PEOPLE OF SYRIA AND ITS BACKGROUND – A HISTORICAL VIEW

Miss.Usanthi Mahalingam1, Prof.K.Arunthavarajah2

[1] Assistant Lecturer, Department of History, University of Jaffna

[2] Associate Professor, Department of History, University of Jaffna.

[1] ushanthym@gmail.com , [2] arunn.msu@gmail.com

## Abstract

Syria, one of the Arab Republics in the Middle East is one of the countries that have been affected by the civil war for a long period of time. At this juncture, It is notable that the reawakening of Arab evolved by the people of Syria against the rulers who had been dominating in the Middle East and South African countries for more than thirty years started in Syria too. In this period, there was a revolution against Bashar Al Assad who was in power in Syria. The majority communities were neglected by the minority communities after the political power had gone into the hands of Hafez Al Assad of Bath Socialist Party. The same condition continued even in the tenure of the rule of Bashar Al Assad who came to the power successively. Thereafter, the revolution started by the majority Sunni Sector against the rule of Assad had turned to an armed riot. The intervention of the other counties in the world was one of the main reasons for the continuation of this civil war without end. China and Russia supported Bashar Al Assad who was their business friend. The I.S. Organization which came from Iraq, Kurdish who demanded separate state, the gulf countries headed by Saudi Arabia , America, Russia, China, Iran and some more entered into Syria. The Syrian war which broke out in 2011 reached its peak in 2016. The City of Aleppo became the war front field. The people started migrating as they could not repulse the aerial attacks and Syrian Government forces' attacks. The people of Syria started migrating to Arab countries and European countries by boats. Though there are various reasons for the migration of Syrians, the main objective of this research is to study the political reason which is one of the reasons for their migration. The co objectives of this research are to identify the natures and the consequences of the Syrian war. The data and information for this explanatory research based on historical approach were obtained on the basis of primary and secondary data collection. While interviews were treated as primary data and the books published in relation to this topic, Magazines, research articles, newspapers, and publications in the internet were treated as secondary data for this research.

**Keywords**: Syrian refugees, the intervention of Russia, the violation of human rights, the reawakening of Arab.

### அறிமுகம்

அண்மைக்காலமாக ஐரோப்பா மற்றும் அரபு நாடுகள் எதிர்நோக்கி வரும் மிக முக்கியமான பிரச்சினை புலம்பெயர்வு என்பதாகும். உள்நாட்டில் நடைபெறும் போர்களில் கொத்துக் கொத்தாக மக்கள் கொல்லப்படுவதே இப்புலம்பெயர்வுகளுக்கக் காரணமாகவுள்ளது. அரச படைகளுக்கும், புரட்சிப்படைகளுக்கும் இடையில் நடைபெறுகின்ற போர்கள் இன்றுவரை முடிவுறாது தொடர்ந்த வண்ணமேயுள்ளன. குறிப்பாக புலம்பெயர்ந்து செல்வோரில் அதிகமானவர்கள் சிரியா, பலஸ்தீனம், மியன்மார் நாடுகளைச் சேர்ந்தவர்களாகவுள்ளமை குறிப்பிடத்தக்கது. உள்நாட்டுப் போர்கள் முடிவுறாது நீண்டு செல்வதற்கு அமெரிக்கா, ரஷ்யா, துருக்கி போன்ற சர்வதேச நாடுகளின் தலையீடு பிரதான காரணங்களிலொன்றாக இருப்பது குறிப்பிடத்தக்கது. சிறுபான்மை இனத்தவரான பஷார் அல் அஷாத்தின் ஆட்சிக்கு எதிராக சிரிய மக்கள் போராடி வரும் நிலையில் மக்கள் போராட்டம் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்தது. புரட்சிப் படைகளுக்கும், அரச படைகளுக்கும் இடையிலான போரில் மக்கள் அதிகளவாகக் கொல்லப்பட்டு வருகின்றனர். குறிப்பான சிறுவர்களே அதிகளவில் சிரிய யுத்தத்தால் பாதிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. மேலும் பல்வேறு மனித உரிமை மீறல் சம்பவங்கள் பலவும் சிரியாவில் பதிவாகின்றன. அத்தகையதொரு சூழலில் சிரிய மக்கள் ஐரோப்பிய நாடுகளுக்கும், ஏனைய ஆராபிய நாடுகளுக்கும் புலம்பெயர்கின்றனர். ஆயினும் இவற்றில் பல நாடுகள் பாதிக்கப்பட்ட இம்மக்களை தம் நாடுகளுக்குள் உள்வாங்கிக் கொள்ள மறுக்கின்ற நிலையில்

சிரிய மக்கள் உள்நாட்டில் வாழ முடியாமலும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர முடியாமலும் பல இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர்.

சிரிய மக்களின் புலம்பெயர்விற்குப் பிரதான காரணங்களிலொன்றான அரசியல் காரணங்களை ஆராய்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாக உள்ளது. மேலும் சிரியப்போரின் தன்மைகள், விளைவுகள் போன்றவற்றினை இனங்காண்பதும்கூட ஆய்வினது துணைநோக்கங்களாக உள்ளன. வரலாற்று அணுகுமுறையின் அடிப்படையில் விவரண ஆய்வாக அமையப் பெற்ற இவ் ஆய்விற்கு தேவையான தகவல்கள் முதல் நிலை, இரண்டாம் நிலைத் தரவுகள் என்ற அடிப்படையில் பெறப்பட்டுள்ளன. அவ் வகையில் நேர்காணல்கள் முதல் நிலைத் தரவுகள் என்ற வகையில் அடங்க குறித்த இவ் விடயம் தொடர்பாக வெளிவந்த நூல்கள், சஞ்சிகைகள், ஆய்வுக் கட்டுரைகள், பத்திரிகைகள், இணையத் தளங்கள் போன்றவற்றில் காணப்பட்ட ஆக்கங்கள் என்பன இரண்டாம் நிலைத் தரவுகளாக உள்ளன.

**சிரியா**

மத்தியகிழக்கிலுள்ள ஓர் அரபுக்குடியரசான சிரியா அரபு உலகில் அல் - அஸாம் என அழைக்கப்படுகின்றது. சிரிய அரபுக் குடியரசு மேற்கில் லெபனானையும், தென்மேற்கில் இஸ்ரேலையும் , யோர்தானையும் , கிழக்கில் ஈராக்கையும் , வடக்கில் துருக்கியையும் எல்லையாகக் கொண்டுள்ளது. (பிரசாத்,சி.2015) இதன் தலைநகரம் டமஸ்கஸ். அலெப்போஇ ஹமாஇ ஹோம்ஸ் போன்றவை டமஸ்கஸ்ஸை அடுத்து முக்கியத்துவம் பெற்ற நகரங்களாகவுள்ளன. நபிகள்நாயகத்தின் காலத்தில் ‘சியாம்’ என்ற பெயரால் அழைக்கப்பட்ட சிரியா, இஸ்லாமிய வரலாற்றை எழுதமுற்படும் போது மெக்கா, மதீனாவுக்கு அடுத்து தவிர்க்கமுடியாத ஒரு பெயராகவுள்ளது. (WWW.tamil.oneindia.com) சிரிய சனத்தொகையில் பெரும்பான்மையினராக இருப்பவர்கள் அரபு மொழி பேசும் சன்னி முஸ்லீம் பிரிவினர். ஏறத்தாழ 70 சதவீதமானவர்கள் இப்பிரிவைச் சார்ந்தவர்களே. சன்னிப்பிரிவினரை அடுத்து கூடியளவானவர்கள் ஷியாப்பிரிவைச் சேர்ந்தவர்களாகவுள்ளனர். இவை தவிர குர்திஷ்(Kurds) > துர்க்மேன் (Thurkmen) > அசீரியன்ஸ் (Assyrians) > துரஸ் (Druze) முதலானவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். அரபுமொழியை உத்தியோகபூர்வ மொழியாகக் கொண்ட சிரியாதான் உலகின் முதற் கால்நடை வளர்ப்பு , விவசாயச் செய்கை என்பன மேற்கொள்ளப்பட்ட நாடாகவுள்ளது. (WWW.wikipedia.org)

**சிரிய உள்நாட்டுப் போருக்கான பின்னணி**

சிரியாவின் அரசியல் வரலாற்றைத் தொடர்ந்து இன்றுவரை சிரியாவில் நடைபெற்று வருகின்ற உள்நாட்டுப் போருக்கான பின்னணி யாது என ஆராய வேண்டியது அவசியமாகின்றது. டெர்ரா நகரின் தென்பகுதியில் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் அரபு வசந்தத்தால் ஈர்க்கப்பட்ட , ஜனநாயகத்தை முன்னிறுத்திய ஒரு கண்டனப் போராட்டம் நடைபெற்றது. இது இன்று சிரியாவில் கொடூரமான உள்நாட்டுப்போராக வடிவெடுத்துக் கொண்டது. 1950களின் பின்னர் பெரும்பாலான அரபு முஸ்லீம் நாடுகள் ஐரோப்பாவிடமிருந்து சுதந்திரம் பெற்றுக் கொண்டன. சுதந்திரம் வழங்கும் போது மேற்கு அரசுகள் தமது நலனிற்கேற்ப மதசார்பற்ற, சர்வாதிகார பீடங்களில் மன்னர்களையும் அவர்களது பரம்பரையினரையும் அரபு அரசுகளில் ஊக்குவித்தன. (பிரசாத்,சி.2015) இச்செயற்பாடு நாட்டுமக்களுக்கு எதிராகவும் , இஸ்லாமியத்துக்கு எதிராகவும் அமைந்தது. அங்கு நடைபெற்ற ஜனநாயக ஒடுக்கு முறை , பாரிய பொருளாதார நெருக்கடி, மத சுதந்திரத்துக்கு எதிரான அடக் முறை, ஊழல் என்பவற்றுக்கு எதிராக மக்கள் மேற்கொண்ட போராட்டமே அரபு வசந்தம். வடக்காபிரிக்க நாடான துனிசியாவில் தொடங்கிய இப்புரட்சி எகிப்திற்குப் பரவலடைந்தது. இரு நாடுகளிலும் உடனடியாகவே ஆட்சியாளர்கள் அகற்றப்பட்டனர். ஆனால் லிபியாவில் சர்வாதிகாரி கடாபி, மேற்கு நாடுகளின் உதவியுடன் கொல்லப்பட்டார். அதன் பின் அரபு எழுச்சி மற்ற நாடுகளுக்கும் பரவியது. அவ்வாறு பரவலடைந்த அரபு எழுச்சியின் மூலம் உருவாகியதே சிரிய உள்நாட்டுப் போர்.(www.puthiyathalaimurai.com)

ஹாபிஸ் அல் அஸாத் என்பவர் சிரியாவின் உள்நாட்டுப் போருக்குக் காரணமான ஆசாத் குடும்பத்தின் ஆட்சிக்கு மூலகாரணமாவார். சிரியாவினை பாத் சோசலிசக் கட்சியின் கீழ் நடக்க வைத்தவரும் அவரே.

வடமேற்கு சிரியாவின் கர்தாக பகுதியின் செல்வாக்கு மிக்க குடும்பமாக ஆசாத் குடும்பம் காணப்பட்டது. இதனால் இந்திய வாரிசு அரசியல் போன்றே ஜனநாயகவடிவம் என்ற பெயரில் பரம்பரைக் குடும்ப ஆட்சி சிரியாவில் நடைபெற்று வருகின்றது. இவ் ஆசாத் குடும்ப ஆட்சியில் மேற்கொள்ளப்பட்ட முறைகேடுகள் உள்நாட்டுப் போரின் ஆரம்பமாக அமைந்து கொண்டன. குறிப்பாக ஹாபிஸ் அல் அஸாத் ஆட்சியின் ஆரம்பத்திலிருந்தே சிரியாவில் அரபு வசந்தம் தோற்றம் பெறுவதற்கான சூழல் ஆரம்பித்து விட்டது. (www.bbc.com) சிரியாவில் 70 சதவீதமான மக்கள் ஷின்னி முஸ்லீம் பிரிவைச் சேர்ந்தவர்கள். ஆனால் ஆசாத் குடும்ப பாத் கட்சியினர் ஷியாப் பிரிவைச் சேர்ந்தவர்கள். இதனால் சிறுபான்மை இனத்தவர்களின் ஆட்சியை அல்லது அரசியலதிகாரத்தைப் பெரும்பான்மை இனத்தவர்கள் விரும்பவில்லை அதே நேரம் ஆசாத் குடும்பத்தவர்கள் மேலை நாட்டுக் கலாசாரத்துடன் இணைந்த கொள்கையைப் பின்பற்றுபவர்களாகவும் உள்ளனர். தொடர்ந்து இஸ்லாமிய வரைமுறைகள் மாற்றத்துக்கு உள்ளாகின. இன்றைய சிரியாவின் அதிபர் பஷார் அல் அஸாத் காலம் வரையான ஆசாத்களின் காலங்கள் எல்லாவற்றிலும் மக்களது பேச்சுரிமை, எழுத்துரிமை என அடிப்படை உரிமைகள் பறிக்கப்பட்டன. எதிர்க்கட்சி செயற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் வழங்கப்படவில்லை. பொதுமக்கள் பலர் காணாமல் போயினர். வெளிநாடுகள் செல்வதற்குத் தடை விதிக்க்ப்பட்டது. இராணுவத்தினரால் மக்கள் ஈவு இரக்கமின்றி கொலை செய்யப்பட்டனர்.

ஷின்னி முஸ்லீம் பிரிவினரது உரிமைகள் பறிக்கப்பட்டன. வேலை வாய்ப்புக்கள், அடிப்படை வசதிகள், அரசியல், பொருளாதார, சமூக, கலாசார அந்தஸ்து என்பவற்றில் பாரபட்சம் காட்டப்பட்டது. 18 வயது பூர்த்தியான அனைவரும் சிரிய இராணுவத்தில் இரண்டு வருடங்கள் கடமையாற்ற வேண்டும் என்பது கட்டாயமாக்கப்பட்டிருந்தது. (வேல்தர்மா.2018) பள்ளி மாணவர்கள் அவர்களது கல்வி முடிவடைந்தபின் பாத் கட்சியில் அங்கத்தவர்களாக இணையவேண்டியது அவசியமாகக் காணப்பட்டது. பாத் கட்சியின் உறுப்பினர் என்பதற்கான ஆதாரம் சமர்ப்பிக்கப்பட்டால்த்தான் கல்லூரிச் சான்றிதழ் வழங்கப்படும் என்ற நிலை ஆசாத் குடும்ப ஆட்சியில் காணப்பட்டது.

1970 – 2000 ஹாபிஸ் அல் அஸாத்தின் ஆட்சி முடிவடைய அவரது மகன் பஷர் அல் அஸாத் ஆட்சியைப் பெற்றுக்கொண்டார். பஷர் 2000, 2007ஆம் ஆண்டுத் தேர்தல்களில் எவ்விதமான எதிர்பார்ப்புகளுமின்றி வெற்றிபெற்று இன்றுவரை ஆட்சி செய்து வருகின்றார். பஷர் அல் அஸாத் காலத்திலும் இஸ்லாமிய நெறிமுறைகளுக்கு எதிரான செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. பஷர் அல்லின் மனைவி அணியும் ஆடைகளும், ஆடம்பரச் செயற்பாடுகளும் இஸ்லாத்தின் நிலைப்பாடுகளைத் துச்சமாக மதித்துச் செயற்படுவதையே சுட்டி நிற்கின்றன. அத்தோடு பஷர் அல் அஸாத்தின் ஈரான், இஸ்ரேல், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளுடனான உறவுகளும் அவர் ஓர் இஸ்லாமியவாதியல்ல என்பதை தெளிவுபடுத்துகின்றன.(பிரசாத்,சி.2015)

இவ்வாறான பல்வேறுபட்ட காரணங்களின் பின்னணியில் பதவியிலிருந்த பஷார் அல் அஸாத்திற்கு எதிராகப் புரட்சி ஆரம்பமானது. டெர்ரா நகரின் தெற்குப்பகுதியில் 2011ஆம் ஆண்டின் மார்ச் மாதம் அரபு வசந்தத்தால் ஈர்க்கப்பட்ட ஜனநாயகத்தை முன்னிறுத்திய ஒரு கண்டனப் போராட்டம் நடைபெற்றது. அத்தகைய போராட்டங்களைச் செய்வோரை நசுக்க, அரசு தனது படைகளைப் பயன்படுத்த, அதிபர் பதவி விலக வேண்டுமென வலியுறுத்தி, நாடு முழுவதும் போராட்டங்கள் தொடங்கின. அமைதியின்மை தொடரத் தொடர போராட்டங்கள் வெடித்தன. முதலில் தற்பாதுகாப்பிற்காகவும், பிறகு தங்கள் பாதுகாப்பு அதிகாரிகளை விரட்டியடிக்கவும், ஆயுதங்களை ஏந்தினர். அந்நிய சக்திகளின் உதவிகளை பெற்றுள்ள பயங்கரவாதிகளை முழுமையாக நசுக்கி நாட்டின் கட்டுப்பாட்டை மீண்டும் கொண்டு வருவேன் என்று அதிபர் உறுதி மொழியளித்தார். இந்த வன்முறைகள் மிக விரைவிலேயே அடுத்த நிலைக்குச் சென்று உள்நாட்டுப் போராக மாறியது. (பீர்முஹம்மது,எச்.2015)

**புரட்சிப் படைகள்**

சிரிய உள்நாட்டுப் போரில் புரட்சியாளர்கள் சார்பாக பல்வேறு படைப்பிரிவுகள் போரிட்டு வருகின்றன. பல படைஅமைப்புக்கள் புதிதாக இணைந்து கொண்டன. சிரியத் தேசியசபை, சுதந்திரசிரியப்படை , ஜபத் அல் நஷ்ரா, இஸ்லாமிய சகோதரத்துவ அமைப்பு, டமஸ்கஸ் பிரகடன அமைப்பு, சிரிய மக்களாட்சிக் கட்சி, சிரியப் புரட்சிக்கான உச்சசபை, சிரிய விடுதலைப்படை, சிரிய தேசிய விடுதலை முன்னணி என இவ்வாறு பல படைக்கலன் ஏந்திய குழுக்களும் மத அமைப்புக்களும் அரசியல் கட்சிகளும் சிரிய ஜனாதிபதி பஷார் அல் அஸாத்துக்கு எதிராகச் செயற்பட்டன. இவற்றில் சுதந்திர சிரியப்படை ஐக்கிய அமெரிக்காவைச் சேர்ந்த ஓர் அமைப்பு. ஜபத் அல் நஷ்ரா அல் கெய்தாவைச் சேர்ந்த ஓர் அமைப்பு என்பது குறிப்பிடத்தக்கது. (வேல்தர்மா.2018)

சிரிய புரட்சிப் படைகளுள் ஒன்றாக முக்கியம் பெற்றுக் கொள்ளும் சுதந்திர சிரியப் படை (FSA – The free Syrian Army) சிரிய இராணுவத்திலிருந்து பிரிந்து வந்தவர்களைக் கொண்டு 2011 யூலை 29ஆம் திகதி உருவாக்கப்பட்டது. ஐம்பது ஆண்டுகளாக அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டிருந்த சிரிய இஹ்வானுல் முஸ்லீம் அமைப்பின் இராணுவ மற்றும் அரசியல் குழுமங்களையும் இப் படை உள்வாங்கிக் கொண்டது. இதில் 90 சதவீதமான ஹின்னாஹ் முஸ்லீம்களும், சிறியளவான அலவதி ஹியா,தருஸி முஸ்லீம்களும், கிறிஸ்தவர்களும் உள்ளடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. சிரியாவின் வடக்கில் அலெப்போ, ஹமாஸ் என்பவற்றிலும் தெற்கில் Daroa , western and Eastern Ghouto பகுதிகளிலும் அதிகமாக நிலைகொண்டுள்ள FSA படை 2011 டிசம்பரில் வெளிநாடுகளிலுள்ள சிரியர்களின் மூலம் உருவாக்கப்பட்ட சிரிய தேசிய கவுண்சில; (Syrian National Council SNC) அமைப்பில் உறுப்புரிமை பெற்றுள்ளது.

2015 ஒக்டோபர்மாதம் அமெரிக்காவின் பங்களிப்புடன் உருவாக்கப்பட்ட அமைப்பு The Syrian Democratic Forces – SDF. மத சார்பற்ற இவ் அமைப்பு ஜனநாயக மதசார்பற்ற ஆட்சி ஒன்றை ஏற்படுத்துதல், குர்திஸ் மக்களுக்கான சுயாட்சி மாநிலம் ஒன்றை உருவாக்குதல் என்ற நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு போராடி வருகின்றது.அஹ்ராரல் ஷாம் அல் இஸ்லாமிய என்ற அமைப்பு 2011ஆம் ஆண்டு அரசுக்கு எதிரான தனது போராட்டத்தை ஆரம்பித்தது. சிரியாவின் சிகப்பு வதை முகாமிலிருந்து விடுதலையாகிய ஹஷ்ஷான அரபுத் என்பவர் தனது சகாக்களுடன் இணைந்து இவ் அமைப்பை உருவாக்கியிருந்தார். ஹஷ்ஷான ஆபுத் 'அஸார் அரசாங்கத்தை வீழ்த்துவதும் மக்களின் அபிலாசைக்கு அமைவாக இஸ்லாமிய ஆட்சியை ஏற்படுத்துவதும்' தனது அமைப்பின் குறிக்கோள் எனக் குறிப்பிட்டிருந்தார்.

சிரிய உள்நாட்டுப்போரில் உள்நாட்டுப் படைகள் தவிர்த்து ஐ.எஸ் இயக்கத்தின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகவுள்ளது. 2104ஆம் ஆண்டு சிரியாவிலும் , ஈராக்கிலும் ஐ.எஸ் அமைப்பு களமிறங்கியது. இவ் அமைப்பு 2014இல் 34,000 சதுர மைல்களைத் தனது கட்டுப்பாட்டின் கீழ்க் கொண்டு வந்தது. (வேல்தர்மா.2018) ஐ.எஸ் அமைப்பின் ஆட்சியதிகார இலட்சியத்தில் சிரியாவும் ஒன்றாக இருந்த நிலையில் சிரியாவில் கிளர்ச்சி அவர்களுக்கு சாதகமாக அமைந்து கொண்டது. எனவே ஆஸாத் அரசை எதிர்க்கும் வகையில் ஐ.எஸ் அமைப்பு சிரியாவுக்குள் நுழைந்தது. பஷாருக்கு எதிராகப் போராடிய பல இளைஞர்கள் ஐ.எஸ. அமைப்பின் போர்ச் செயற்பாடுகள் காரணமாக அதனுடன் இணைந்து கொண்டனர். சிரியாவின் வைதீக கிறிஸ்தவர்கள், யூதர்கள் , ஷியாக்கள் உட்படப்பலர் கொல்லப்பட்டனர். கிறிஸ்தவர்களின் ஆலயங்கள் அழிக்கப்பட்டன. பஷார் அல் அஸாத்தால் சன்னிப் பிரிவினரால் கொல்லப்பட்டதற்குப் பழி வாங்கும் வகையில் ஐ.எஸ்ஸால் ஷியாக்கள் கொல்லப்பட்டனர். ஐ.எஸ் அமைப்பு சிரியாவிற்குள் இருப்பதை மேலைநாடுகளும் ஏனைய அரபு நாடுகளும் விரும்பவில்லை. சிரியாவிலிருந்து அவர்களை அகற்றுவதற்கான போர்கள் நடைபெறுகின்றன. இருப்பினும் அவர்களை முழுமையாக அகற்றமுடியவில்லை என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

**வெளிநாடுகளின் தலையீடு**

எழு வருடங்களாகியும் சிரிய உள்நாட்டுப் போர் முடிவுறாது நீண்டு செல்வதற்கு வெளிநாடுகளின் தலையீடு பிரதான காரணமாகவுள்ளது. அமெரிக்கா , சவுதி அரேபியா ,ரஷ்யா மற்றும் ஈரான் போன்ற உலக சக்திகளின் தலையீடு போரை மேலும் வலுப்படுத்தியுள்ளது. அரசிற்கு எதிரான கிளர்ச்சிப் படைகளுக்குப் பிரான்ஸ், பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகள் ஆயுதம் உட்பட அனைத்து வசதிகளையும் வழங்கி வருகின்றன.

மறுபுறம் அஸாத்திற்கு ஆதரவாக ரஷ்யா, சீனா, ஈரான் போன்ற நாடுகள் முழுமையான இராணுவப்படை உட்பட அனைத்து வசதிகளையும் வழங்கி வருகின்றன.(பிரசாத்,சி.2015) அஸாத்தின் ஆதரவுப்படைகளுக்கும் , எதிர்ப்படைகளுக்கும் இந்நாடுகள் வழங்கிய இராணுவ பொருளாதார அரசியல் உதவிகள் சிரியாவைப் போர்க்களமாக மாற்றியது. நாட்டில் பெரும்பான்மையாகவுள்ள சன்னி முஸ்லீம்களை அஸாத்தின் ஷியாப்பிரிவினர்க்கு எதிராகத் தூண்டிவிட்டுப் பிரிவினைவாதத்தை உருவாக்குவதாக வெளிநாட்டு சக்திகள் மீது குற்றச்சாட்டுக்களும் முன்வைக்கப்பட்டன.

சிரிய உள்நாட்டுப் போரில் ரஷ்யாவின் பங்களிப்பு பிரதானமானது. 1967ஆம் ஆண்டு இஸ்ரேலுடன் அரபு நாடுகள் நடத்திய போரில் அரேபியா தோல்வியடைந்ததன் பின்னர் சிரியா பிரிட்டனுடனும் அமெரிக்காவுடனும் இருந்த உறவை முறித்துக் கொண்டு ரஷ்யாவுடனான தனது உறவை வலுப்படுத்தியிருந்தது. சிரியாவில் நடைபெறும் போரில் ரஷ்யா தலையிடுவதற்குப் பல காரணங்கள் இருப்பினும் இரண்டு பிரதான காரணங்களாகவுள்ளன. ஒன்று சிரியாவைத் தன் கட்டுப்பாட்டின் கீழ் வைத்துக்கொள்வதன் மூலம் தான் அதிக நன்மைகளைப் பெற்றுக் கொள்ள முடியும். மற்றையது பனிப்போர் நடைபெற்ற காலத்தில் சிரியா ரஷ்யாவிற்கு உதவி புரிந்துள்ளது. அப்போதிலிருந்தே சிரிய அதிபர் குடும்பமும் ரஷ்யாவும் நெருக்கமான உறவைப் பேணின. (www.tamil.oneindia.com) .

சிரிய யுத்தத்தில் ரஷ்யாவின் தலையீடு அதிகமான நெருக்கடியை ஏற்படுத்தியது. ஆரம்பத்தில் கிளர்ச்சிப் படைகள் வலுவான நிலைகளைக் கைப்பற்றினாலும் ரஷ்யாவின் தலையீட்டின் பின்னர் வீழ்ச்சியடையத் தொடங்கின. ரஷ்ய விமானப் படைகளின் ஆதரவுடன் ஈரானும் , சில இஸ்லாமிய இயக்கங்களும் சிரியப் படைகளுக்கு ஆதரவளித்தன. சிரியாவின் துறைமுகம் ரஷ்ய கடற்படைத் தளமாக நிரந்தரமாக அமைந்தது. ரஷ்யப் படைகளின் மேற்காசிய மீள்பிரவேசத்திற்கு சிரியா ஒரு தெளிவான வெளியை வழங்கியுள்ளது. எகிப்து , வெனிசுலா , நிக்குரகுவா, சிசிலி மற்றும் சிங்கப்பூர் துறைமுகங்களை மொஸ்கோவுக்காகத் திறந்து விடுவதற்கான உரையாடலை ரஷ்யா மீளஆரம்பித்தது. (www.vaaramanjari.lk)

சிரியப் போரை உக்கிரமடையச் செய்ததில் ரஷ்யாவை அடுத்து முக்கிய பங்காளியாக இருப்பது அமெரிக்கா. அமெரிக்கா சிரிய போராட்டக் குழுக்களுக்கு ஆதரவாகச் செயற்பட்டு வருகின்றது. சிரிய இராணுவம் அங்குள்ள அப்பாவி மக்கள்மீது மேலும் தாக்குதல்களை நடத்தினால் அமெரிக்கா அதை எதிர்கொள்ளத் தயாராக இருப்பதாக அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப் தெரிவுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (www.tamilwin.com) சவுதிஅரேபியாவிடமிருந்து எண்ணெய் பெற்று அதிக இலாபத்திற்கு விற்பனைசெய்யும் அமெரிக்காவிற்கு சிரியாவிலிருக்கும் எண்ணெய் வளத்தையும் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற எண்ணம் உள்ளது. ரஷ்யா சிரியா சார்பாகப் போரிடும் நிலையில் சிரியாவை ரஷ்யா தனது ஆதிக்கத்தின் கீழ்க் கொண்டு வர அனுமதிக்கக் கூடாது என்றும் அமெரிக்கா இப் போரில் பங்குபற்றுகின்றது. சிரியக் கிளர்ச்சிப் படைகளுக்கு அதிகளவான ஆயுதங்களை வழங்கி வருவதுடன் ஏனைய அரபு நாடுகளைச் சிரியாவைப் புறக்கணிக்குமாறும் அமெரிக்கா கூறி வருகின்றது.

அமெரிக்கா, ரஷ்யா பிரதான தலையீட்டாளர்களாக இருக்கும் நிலையில் சவுதி அரேபியா , ஈராக் , துருக்கி ஆகியனவும் போரில் தமது பங்களிப்பை வழங்கி வருகின்றன. ஷியாப் பிரிவைச் சேர்ந்த நாடாக ஈராக் உள்ளது. சிரியாவில் ஆட்சியில் இருக்கும் ஷியாப் பிரிவினர்க்கு எதிராக சன்னிப் பிரிவினர் போராடி வருவதால் அங்கு ஷியா ஆட்சி தொடர வேண்டும் என ஈராக் அஸாத் அரசுக்கு ஆதரவாக செயல்பட்டு வருவதுடன் கோடிக்கணக்கான நிதி ஒதுக்கீடு செய்து ஆயுதங்களை சிரிய அரசுக்கு வழங்கி வருகின்றது. சவுதிஅரேபியா சன்னிப்பிரிவு நாடாகையால் புரட்சியாளர்களுக்கு ஆதரவு வழங்கி வருகின்றது. மேலும் இது எப்போதும் ஈராக்கிற்கு எதிரான நிலைப்பாட்டைக் கொண்ட நாடு. எனவே நேரடியாக ஈராக்கிற்கு எதிரான அமைப்பிற்கு உதவி செய்து வருகின்றது. அதே நேரம் இது தீவிரவாத இயக்கங்களுக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாகவும் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. (www.tamil.omeindia.com) சிரிய கிளர்ச்சியாளர்களில் குர்திஷ் இன மக்களும் போராடி வருவதால் துருக்கியும் கிளர்ச்சியாளர்கள் சார்பாகச் செயற்பட்டு வருகின்றது. போராளிக் குழுக்களுக்கு உதவும் இரண்டாவது பெரியநாடாக துருக்கியுள்ளமை கவனிக்கத்தக்கது.

உலக நாடுகள் பலவும் சிரியாவில் தமது சொந்த நலன்கள் பொறுத்துப் போராடி வருகின்றன. சிரியா அதிகளவான எண்ணெய் வளம் கொண்ட நாடாக இருப்பதனாலும் அரபுநாடுகளில் வியாபாரம் செய்யச் சிரியக்கடல் அவசியமாக இருப்பதனாலும் இஸ்ரேலைக் கண்காணித்துக் கொள்ளவும் சிரியாவைத் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வரவேண்டும் என்ற நோக்கில் உலக நாடுகள் சிரிய உள்நாட்டுப் போரில் தலையிட்டு இன்றுவரை போர் முடிவுறாது தொடரக் காரணமாக இருந்துவருகின்றன.

**சிரிய மக்களின் புலம்பெயர்வு**

2011ஆம் ஆண்டு தொடங்கி இன்றுவரை தொடரும் சிரியயுத்தத்தில் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டுள்ளனர். சிரிய உள்நாட்டுப் போரில் குறைந்த பட்சம் 2.5லட்சம் மக்கள் இறந்திருக்கலாம் என ஐ.நா தெரிவித்துள்ளது. எனினும் 2015ம் ஆண்டு ஆகஸட் மாதம் முதல் தனது கணக்கெடுப்பை நிறுத்திக் கொண்டது. ஐக்கிய இராச்சியத்தை தலைமையகமாகக் கொண்டு இயங்கும் கண்காணிப்புக் குழுவான மனித உரிமைகளுக்கான சிரியாவின் ஆய்வகம் 2018 டிசம்பர் மாதம் வெளியிட்ட அறிக்கையில் சிரியாவில் 3,46,600 பேர் இறந்துள்ளதை ஆவணப்படுத்தியுள்ளது. (www.bbc.com) இதில் 1,03,000 பேர் பொது மக்கள். இந்த கணக்கெடுப்பில் காணமல் பேயிருக்கலாம், இறந்திருக்கலாம் என்று கணக்கிடப்பட்ட 56,900 பேர் சேர்க்கப்படவில்லை என்பதையும் அறிக்கை குறிப்பிட்டுள்ளது. உயிர் இழப்புகள் மட்டுமன்றி பல்வேறு மனிதஉரிமை மீறல் சம்பவங்கள் பலவும் நடந்தேறுகின்றன. ஐ.நா மற்றும் பிற சர்வதேச தொண்டு அமைப்புகள் சார்பில் போரில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருட்களை விநியோகம் செய்யும் ஆண்களால் அங்குள்ள பெண்கள் பாலியல் சுரண்டல்களுக்கு ஆளவதாக அறிக்கைகள் வெளிவந்துள்ளன. எச்சரிக்கையும் மீறி இத்தகைய சுரண்டல்கள் சிரியாவின் தெற்கில் நடப்பதாக இருப்பதாக Voices form Syria 2018 $Wfpd;wJ.

ஐ.நா கணக்கின்படி 5.6 மில்லியன் மக்கள் சிரியாவில் இருந்து வெளியேறியுள்ளனர். அதில் பெரும்பாலானோர் பெண்கள் குழந்தைகள். சம கால வரலாற்றிலேயே இல்லாத அளவிலான இந்தப் புலம்பெயர்தலை சமாளிக்க அருகாமை நாடுகளான லெபனான், ஜோர்டான் மற்றும் துருக்கி ஆகியவை திணறின. சிரிய அகதிகளில் 10 சதவீதமானமவர்கள் பாதுகாப்பன முறையில் ஐரோப்பாவில் தஞ்சம் புகுந்தனர். மேலும் 6.1 மில்லியன் மக்கள் தங்கள் நாட்டினுள்ளேயே இடம்பெயர்ந்துள்ளனர். 2018இல் சிரியாவினுள் மனிதாபிமான உதவிகள் தேவைப்படும் 13.1 மில்லியன் மக்களுக்கு உதவ 3.5 பில்லியன் தொகை தேவைப்படும் என ஐ.நா கணக்கிட்டுள்ளது. சிரிய மக்கள் ஈரான் , ஜோர்தான் , துருக்கி , லெபனான் ஆகிய எல்லைப்புற நாடுகளுக்கும் ஐரோப்பிய நாடுகளுக்கும் புலம்பெயர்ந்து செல்கின்றனர். லெபனானில் 1.2 மில்லியன், ஜோர்தானில் 650,000 துருக்கியில் 2மில்லியன் , ஈராக்கில் 3 மில்லியன் , ஐரோப்பாவில் 11.5 மில்லியன் எனப் பாரிய தொகை அகதிகள் தஞ்சமடைந்துள்ளனர். ஆரம்பத்தில் பல நாடுகளும் சிரிய அகதிகளை ஏற்றிருந்தாலும் காலப்போக்கில் அவர்களை ஏற்க மறுத்தனர். காரணம் அகதிகள் நிறைந்து காணப்படுவதனால் தங்களுடைய நாடுகளும் புரட்சிக்கு முகங்கொடுக்கும் நிலை வருமோ என்ற அச்சம் காணப்பட்டது. (பீர்முஹம்மது.2015 ) வளைகுடா நாடுகள் மற்றைய நாடுகளைப் போல் அல்லாமல் மன்னராட்சியை அடிப்படையாகக் கொண்டவை. அதனால் புரட்சி மனோபாவம் கொண்ட சிரிய மக்கள் அகதிகளாக இங்கு குடியமர்ந்து சொந்தக் குடிமக்களுடன் இணைந்து தங்களைக் கேள்விக்கு உட்படுத்தி விடக்கூடாது என்ற முன்னுணர்வைக் கொண்டுள்ளன.

கடல் கடந்து கண்டம் விட்டுப் புலம்பெயர்ந்து செல்லும் சிரிய அகதிகள் பல துன்பங்களை எதிர்கொள்கின்றனர். நீண்ட கடற்பயணத்தில் பலர் உயிரிழக்கின்றனர். அதிகமாக சிறுவர்கள் உயிரிழப்பதுடன் காணாமற் போயும் உள்ளனர். அய்லான் குர்தியின் கடல் மரணம் உலக சமூகத்திற்கு அகதிகள் குறித்த செய்தியை மரணக்குறிப்பால் உணர்த்தியுள்ளது. இது போன்ற அவலங்களை பர்மாவின் ரொஹிங்கியா முஸ்லீம்களும் ஈழத்தமிழர்களும் அனுபவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது. (துருக்கி கடற்கரையில் கரையொதிங்கிய அய்லான் குர்தியின் புகைப்படம் )

இன்று ஐரோப்பாவில் மிகப்பெரிய தலையிடியாக இருப்பது அகதிகள் நெருக்கடி. அதிகளவான அகதிகளை ஐரோப்பா உள்வாங்கியுள்ளது. அவர்களை ஐரோப்பிய நாடுகளிடையே பகிர்ந்தளிப்பது தொடர்பான தீர்க்கமான

முடிவு எட்டப்படாமையால் இந் நெருக்கடி மேலும் அதிகமாகவுள்ளது. 2015ஆம் ஆண்டு மட்டும் ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட அகதிகளை ஐரோப்பா உள்வாங்கியிருந்தது. ஆனால் அவர்களை ஐரோப்பிய நாட்டுப் பிரஜைகளாக ஏற்று அடிப்படைத்தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கான திட்டங்களில் அதிகளவில் தோல்வி கண்டிருந்தது. அண்மையில் டென்மார்க் அரசு அகதிகளின் செலவினங்களை சமாளிக்க அகதிகளிடமிருந்து 1300 டொலர் பெறுமதியான பொருட்களைச் சுவீகரிப்பதற்கான திட்டத்தை நடைமுறைப்படுத்தியிருந்தது. இத்தகையசெயற்பாட்டால் இது சர்வதேச மட்டத்தில் கண்டனங்களுக்குள்ளாக்கப்பட்டது.

பெரும்பாலான ஐரோப்பிய நாடுகள் அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்கான நிலைப்பாட்டையே கொண்டுள்ளன. ஆனால் சிரியாவில் தற்போது பெரும்பாலான வளங்கள் அழிக்கப்பட்டு விட்டன. மீண்டும் அங்கு வளங்கள் நிறுவப்பட்டு மக்களுக்கு ஏற்ற சூழல் உருவாகப் பல தசாப்தங்கள் கூடப் போதாது. அவ்வாறான நிலையில் சிரிய புலம்பெயர் அகதிகளைத் திருப்பி அனுப்புவது சாத்தியமானதா என்பது கேள்விக்குரியதாகவேயுள்ளது.

சர்வதேசளவில் நிகழும் புலம்பெயர்வுகளில் சிரிய உள்நாட்டுப்போரினால் ஏற்படும் புலம்பெயர்வு பிரதான இடத்தைப் பிடித்துள்ள நிலையில் சிரியாவில் நடைபெறும் இவ் உள்நாட்டுப் போரில் உலகை உலுக்கும் பல மனித உரிமை மீறல்கள் நடந்து வருகின்றன. அஸாத் அரசு தாக்குதல்களை நிறுத்த வேண்டும் என்றும் ஐ.நாவின் பாதுகாப்புச்சபை அங்கத்துவ நாடுகள் உட்பட உலக நாடுகள் அனைத்தும் சிரிய அரசின் தாக்குதல்களைக் கண்டிக்க வேண்டும் என்றும் உலக நாடுகளிடம் பிருத்தானிய வெளியுறவுச் செயலாளர் வில்லியம் ஹேக் கோரிக்கை விடுத்திருந்தார். (அனஸ்.2012) அலெப்போவில் சிரிய அரசு மேற்கொண்ட கொடூர தாக்குதல் காரணமாக சிரிய சன்னி மூஸ்லீம் அமைச்சர் கிஹ்லாஸ் அல் பதவி விலகி துருக்கி சென்றிருந்தார். குறைந்தபட்ச உரிமைகளுக்காகப் போராடும் மக்களை இவ்வளவு மோசமாகத்தாக்கி அழிக்கும் இந்த அரசின் பங்காளியாக நான் இருக்கமாட்டேன் என்றும் கிஹ்லாஸ் அல் கூறியுள்ளார். சிரியாவில் அஸாத்தின் செயற்பாடுகள் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாகியுள்ளன. 'அஸாத் மனிதத்துவத்தை இழந்து விட்டார். சிரியாவில் ஏற்பட்டுள்ள இவ்வகோர நிலைக்கு பஷர் பொறுப்புக்கூறவேண்டும்' என பான்கிமூன் குறிப்பிட்டுள்ளார். 'அஸாத் சிரியாவில் இல்லாவிடின் அது ஒரு சிறந்த நாடாக இருக்கும் என ஹிலாரி கிளிண்டன் கூறியுள்ளார்.

**நிறைவுரை**

அரபு நாடான சிரியாவில் ஷியா ,சன்னி முஸ்லீம் பிரிவினருக்கிடையே அஷார் அல் அஸாத்தின் ஆட்சிக்கு எதிராக நடைபெற்ற புரட்சி வெளிநாட்டு சக்திகளின் தலையீட்டால் உள்நாட்டுப்போராக மாறி இன்று உலக நாடுகளிடையே அதிர வைக்கும் யுத்த பூமியாக சிரியா மாறியுள்ளது. போரை முடிவுக்கு கொண்டுவர நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. இரு தரப்பின் கவனத்துடன் ஐ.நாவின் பாதுகாப்புகுழு 2012இல் ஜெனிவா குழுவுக்F (Geneva Communique) அழைப்பு விடுத்திருந்தது. 2014ஆம் ஆண்டின் தொடக்கத்தில் 'ஜெனிவா 2' என்ற அனுமதிக்கான பேச்சுவார்த்தை நடைபெற்றது. அமைதிக்கான பேச்சுவார்த்தைகளில் அதிபர் பதவி விலக வேண்டும் என்று கேட்கப்பட்டு வந்ததால் பேச்சுவார்த்தைகள் தோல்வியடைந்தன. அஸாத்தின் தீவிரவாத போக்கும் தன்நலனுக்கான வெளியீடுகளும் சிரியப்போரை முடிவுக்கு கொண்டு வராது நீண்டு செல்லச் செய்கின்றன. குழந்தைகள் அழிக்கப்பட்டும், வளங்கள் அழிக்கப்பட்டும் சிரிய உள்நாட்டுப் போர் சிரியாவின் எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியுள்ளது.

**உசாத்துணை நூல்கள்**

**தமிழ் நூல்கள்**

பிரசாத்,சி. (2015). *அரபுவசந்தம்*,சேமமடு பதிப்பகம் : கொழும்பு

**சஞ்சிகைகள்**

பீர்முகம்மது,ஏச். 2014இ ''ஆக்கிரமிப்பும் இன அழிப்பும் வலியின் ரணங்கள். இஸ்ரேலின் ஆக்கிரமிப்பு குறித்து'', *உயிர்மை*, இதழ் 133.

**பத்திரிகைகள்**
வலம்புரி, வலம்புரி அன் கோ யாழ்ப்பாணம், 2018.09.05.
வலம்புரி, வலம்புரி அன் கோ யாழ்ப்பாணம், 2018.08.31.
வீரகேசரி, வீரகேசரி எக்ஸ்பிறஸ் நியூஸ்பேப்பர (சிலோன்) (பிறைவேற்)லிமிட்டெட், 2010.13.09
தினக்குரல், யாழ் தினக்குரல் நொதேர்ன் பப்பிளிகேஷன் (பிரைவேட்)லிமிட்டெட் ,2010.08.10

**இணையத்தளங்கள்**
www.Yarl.com
www.marxist.tncpim.org
www.Facebook.com
www.dailyceylon.com
www.wsws.tamil.com
www.keetru.com
www.keetu.com
www.ta.m.wikipedia.org
www.vaaramanjari.lk
www.eelamalar.com
www.Yarl.com
www.unmainvasal.blogspot.in
www.ekuruvi.com
www.telonews.com